www.tamilarangam.net

# தமிழீழ
# மக்கள் விடுதலைக் கழகம்
## பின்தள மகாநாட்டை ஒட்டிய செய்தி

24-7-86 அன்று ஜனநாயகப்பூர்வமான முறையில் தாபனத்தின் பின்தள மகாநாடு கூட்டப்பட்டுவிட்டதால் கழக மத்திய சபையானது இயல்பாகவே கலைந்துபோகின்றது. இந்த வகையில் எந்தவொரு முன்னாள் மத்திய குழு உறுப்பினரும் குழுவாய் பிரிந்துசென்று தாபனத்தின் பெயருக்கோ, இலட்சனைக்கோ, சொத்துக்களுக்கோ உரிமை கோரமுடியாது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பின்தள மகாநாட்டை ஒட்டிய செய்தி

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமானது தமிழீழ மக்களின் முழுமையான விடிவிற்காக போராடிவரும் முற்போக்கு இயக்கம் என்பதை அனைத்து மக்களும் அறிவீர்கள்

எமது இயக்கமானது 1980 தோற்றம் பெற்று மக்கள் அமைப்பு-களை ஏற்படுத்தி, அதனூடாக ஆயுதப் போராட்டத்திற்காக இளைஞர்களை அணிதிரட்டி அரசியல் மயப்படுத்தபட்ட இராணுவ வீரர்களை கொண்ட இயக்கமாக படிமுறையில் வளர்ச்சியடைந்து வந்தது. (வரலாற்றின் போக்கில் 1983 ல் இடம்பெற்ற யூலை இனக்கலவரத்தையடுத்து எழுச்சி பெற்ற இளைஞர் சக்தியை பெருமளவு உள்வாங்கி திடீர் வீக்க நிலைக்கு உள்ளாகியது) இன்று மக்கள் இயக்கமாக இது மலர்ச்சியடைந்திட்டிருந் தாலும் ஆரம்பகாலத்தில் சிறு பயங்கரவாத குழுவாகவே செயற்பட்டு வந்தது இதனால் இப்பயங்கரவாதத்தின் எச்ச சொச்சங்கள் தொடர்ந் தும் இருந்தே வந்தது இதன் பிரதிபலிப்பும் எமது நிர்வாக அமைப்பு முறைகளில் ஏற்பட்ட தவறுகளும் எமது சமுதாயத்திலுள்ள வர்க்க முரண்பாடுகளின் தாக்கமும் எமது அமைப்பினுள் இருந்ததால் ஸ்தாப னம் சிதைக்கின்ற நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டது. இதனால் எமது அமைப்பை இறுக்கமாக்கும் நோக்குடன் மாசி திங்கள் 19 முதல் 24 வரை யாழ்ப்பாணத்தில் தளத்திற்கான ஒரு மாநாடு நடைபெற்றது. இம் மாகநாட்டை அடியொற்றி பின்தளத்திலும் ஒரு மாகநாடு நடைபெறுவ தாக இருந்தது.

இம்மகாநாடு தமிழ்நாடு தஞ்சை மாவட்டம் திருவாரூரில் 19 7 86 நடைபெறவிருந்தது இருப்பினும் இப்பின்தள மகாநாட்டில் தளமாநாட்டுப் பிரதிநிதிகளா இருந்த சிலரது கடந்தகால தவறுக ளுக்கு காரணமாகவிருந்த எமது மத்திய ஸ்தாபன அங்கத்தவர்களின தும் நடவடிக்கைகளில் நிமித்தம் இம்மகாநாடு குறிப்பிட்ட நாளில் நடைபெறுவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவையாவன

1. ஸ்தாபான ரீதியான பல தவறுகளுக்கு காரணமாகவிருந்த மத்திய ஸ்தாபன அங்கத்தவர்கள் சிலர் இம் மகாநாட்டிற்கு முகம் கொடுக்க திராணியற்ற நிலையில் தமக்குச் சாதகமாக ஒரு குழுவை ஆரம்பத்தில் இருந்தே வளர்ந்து வந்தமை.

2. தமது தவறுகளை மூடி மறைப்பதற்காக ஸ்தாபன ரீதியாக ஏற்பட்ட தவறை முகுந்தன் என்கின்ற தனிநபர் மேல் சுமத்தியமை

3. அமைப்பினுள் வைக்கவேண்டிய விமர்சனங்களை ஆரோக்கியமற்ற முறையில் வீதிகளில் வைத்து விமர்சித்து தம்மை நியாயவாதிகளாக விளம்பரப்படுத்திக்கொண்டமை

4. இம்மகாநாட்டுக்கென தளமகாநாட்டு பிரதிநிதிகளாக வந்தவர்களில் சிலர் ஒருபக்க சார்பாக நின்றதோடு இம்மகாநாட்டைப் புறக்கணிக்கும் ஈடுபட்டமை.

5. இம்மகாநாட்டு ஏற்பாட்டுக்குழுவில் இருந்த சிலர் இப்பிரச்சனைக்கு முகம் கொடுக்க அஞ்சியதோடு ஸ்தாபனத்தில் இருந்து ஒதுங்கி கொண்டமை.

இத்தகைய காரணங்களால் பின்தள தோழர்கள் மத்தியில் ஓர் குழப்பமான சூழ்நிலை உருவாகியது. இந்நிலையில் கழகத்தை அடுத்த கட்ட நிலைக்கு இட்டுச் செல்வதற்கு மகாநாட்டை நடாத்தி முடிக்க வேண்டி நிர்ப்பந்தம் கழகத்தின் உயர் அங்கமான கட்டுப்பாட்டுக் குழுவிற்கு ஏற்பட்டது.

இதேவேளை 19. 7 83 ல் மகாநாட்டில் கலந்து கொள்ளவிருந்த பேராளர்களில் பெரும்பான்மை இம்மகாநாட்டை உடன் நடாத்தி முடிக்க கட்டுப்பாட்டுக்குழுவை கேட்டுக்கொண்டது. அடுத்து, ஏற்கனவே இருந்த மகாநாட்டு ஏற்பாட்டுக்குழுவுடன் பேராளர் மத்தியில் இருந்த சிலரும் சேர்க்கப்பட்டு இவ்ஏற்பாட்டுக்குழுவே ஏற்கனவே அங்கம் வகித்த கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர்கள் விலகிக்கொண்டு மகாநாடு நடாத்தி முடிப்பதற்கான முழு அதிகாரமும் ஏற்பாட்டுக் குழுவிடம் கொடுக்கப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

24-7-86 அன்று முன்னர் குறிப்பிட்ட அதே இடத்தில் ஆரம்பமான இம்மகாநாட்டில், அங்கு சமூகமளிக்காத தோழர்களை உடன் அழைத்து வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு அவர்கள் உடன் நடவடிக்கையில் ஈடுபட கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். நாம் இவ்விணைப்பு முயற்சியில் இறங்கியிருந்த அதே வேளை இம்மகாநாட்டைப் புறக்கணித்து வெளியேறிய குழுவினர் ஒன்று சேர்ந்து, ஏற்கனவே நடைபெற்ற தளமகாநாட்டின் அடிப்படை நோக்கங்களையும், பிரேரணைகளையும் புறக்கணிக்கும் வகையில் ஓர் அறிக்கை தமிழ்நாட்டு பத்திரிகைகள் வாயிலாகவும், துண்டுப் பிரசுரம் மூலமும் வெளியிட்டிருந்தார்கள்.

இதுமட்டுமன்றி எமது முகாம்களில் இருந்த தோழர்களை ஆயுத முனையில் ஏற்றிச் செல்லவும், முகாம் பொருட்களை கொள்ளையடித்ததுடன் சேதப்படுத்தியும் உள்ளார்கள். நாம் தஞ்சம் புகுந்துள்ள தமிழ்நாட்டில் எம்மை ஆத்திரப்பட வைத்து சட்டம், ஒழுங்கை மீறி அதன் மூலம் அசம்பாவிதங்களை தோற்றுவித்து மகாநாட்டை குழப்புவதற்கு திட்டமிட்டு இருந்தனர். இத்தகைய அசம்பாவிதங்கள் காரணமாக எமது முகாம் தோழர்களுக்கு உடன் முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டுமென்றும், கழக இலட்சனையை தவருக பயன்படுத்தி துண்டுப்பிரசுரம் வெளியிட்டோர் மீதும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரி மகாநாட்டை தலைமை தாங்கிக்கொண்டிருந்த 1-ம் நாள் தலைமைக்குழு தமது பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டது. இதனால் மகாநாட்டு நிகழ்ச்சிகள் சிறிது நேரம் தடைபட்டாலும் உடன் மகாநாட்டு ஏற்பாட்டுக்குழு கூடி அரசியல் ரீதியான அணுகுமுறைகளை மேற்கொண்டு இக்கோரிக்கைகள் நிறைவேற்றுவதென உறுதிமொழியளித்ததை அடுத்து அதே தலைமைக்குழு தோழர்கள் தலைமை தாங்க மகாநாடு தொடர்ந்தது.

2-ம் நாள் நிகழ்ச்சியில் முதல் கட்டமாக கழக எதிர்ப்பாளர்கள் துண்டுப்பிரசுரம் ஆய்வுக்கு விடப்பட்டது. ஆய்வின் போது:

1. கழகமகாநாடுவரை கழகத்தின் உயர் அங்கமாக கட்டுப்பாட்டுக்குழுவே பணியாற்றும் என்ற தளமகாநாட்டின் தீர்மானத்தை திரித்து கட்டுப்பாட்டுக்குழு மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, என்ற தவருன செய்தியை வெளியிட்டிருந்ததையும்,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. கட்டுப்பாட்டுக்குழு நியமனத்தில் வந்த மத்திய ஸ்தாபன அங்கத்தவர்கள் கழகத்தின் கட்டுபாட்டுக்குழுவை நிராகரிக்கும் உரிமையற்றவர்கள் என்பதையும்,

3. மொத்த மத்திய ஸ்தாபன அங்கத்தவர்களில் தளத்தில் பணியாற்றிய நான்கு மத்திய ஸ்தாபன அங்கத்தவர் பொறுப்புகளும் தளமாகநாட்டுடன் காலவதியாவதால் எஞ்சியுள்ள பதின் மூவரில் ஐவர் மட்டும் வெளியேறி மத்தியகுழுவில் பெரும்பான்மையோர் என்று தங்களை கூறிக் கொண்டு அரசியல் ஆதிக்க சக்திகளை தூண்டுதலுக்கு துணை நின்று தாங்களே கழகம் என்று கூறுவது என்றும் ஏற்க முடியாததென்பதையும் இதுதவிர தளத்தில் பணிபுரிந்த நான்கு மத்திய ஸ்தாபன உறுப்பினர்களில் சிலரும் ஏனைய புதிய தளக்குழுவின் அங்கத்தவர்களில் சிலரும் தளமகாநாட்டை அவமதிக்கும் விதத்தில் எமது அமைப்பை உடைக்க முயலுவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும்.

4. ஸ்தாபனத்தின் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் முகுந்தன் என்கின்ற தனிநபர் மீது வசைபாடும் வகையிலும் அமைந்துள்ளது. தளமகாநாட்டு தீர்மானத்திற்கு எதிரானது என்றும்,

சுட்டிக்காட்டப்பட்டது. இத்தனைக்கும் பின்பும் கூட நாம் நிதானமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது பிரிந்து சென்ற இக்குழுவினர் எம்முகாம்கள் அமைந்திருக்கும் பிரதேசங்களில் மக்கள் மத்தியில் தவறான பிரச்சாரங்களை மேற்கொண்டதுடன் அரசியல்வாதிகள் அநாகரிகமான முறையில் பயன்படுத்தி எம்மை மக்கள் மத்தியிலிருந்து அந்நியமாக்கவும், முகாம்களினுள் தோழர்கள் மத்தியில் பிரதேச வேறுபாடுகளை தூண்டி விட்டு தவறான வதந்திகளை பரப்பி தோழர்களை குழப்ப நிலைக்கு இட்டுச் சென்று அவர்களை அமைப்பை விட்டு வெளியேறத் தூண்டினார்கள்.

கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர்களும், ஏனைய முன்னணித் தோழர்களும் நிர்வாகங்களில் பணியாற்றியவர்களும் மகாநாட்டில் கலந்து கொண்டிருந்ததனாலும், தமிழக சட்டத் திட்டங்களை நாம் மீறக்கூடாது என்பதில் உறுதியாக இருந்ததும் அவர்களின் இச்செயற்பாடுகளுக்கு சாதகமாக அமைந்திருந்தது.

மேல் சொல்லப்பட்ட சம்பவங்களை அடுத்து மகாநாட்டை புறக் கணித்தவர்கள் மகாநாட்டிற்கு வராத பட்சத்திலும் மகாநாடு தொடர்ந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைபெறும் எனவும், ஆனால் இம்முயற்சியில் ஈடுபடுவதற்காக மகா நாட்டு ஏற்பாட்டுக்குழுவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குழு தொடர்ந்து செயற்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து எமது முன்னணித் தோழர்களினதும் கட்டுப்பாட்டுக் குழு அங்கத்தவர்களினதும் செயலதிபர் தோழர் முகுந்தன் அவர்களினதும் விமர்சனமும் வைக்கப்பட்டது.

"கடந்த கால தவறுகளை படிப்பினையாக கொண்டு எதிர்கால தவறுகளை தவிர்த்து"

எமது அமைப்பை அடுத்தகட்ட வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்வ தற்கான வேலைத்திட்டங்களும் வகுக்கப்பட்டு, எமது கடந்தகால மூலோபாயம், தந்திரோபாயம் ஆகியனவும் ஆராயப்பட்டது.

இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களின் சுருக்கம் (பொது)

1. தாபனத்தின் கடந்தகால தவறுகளுக்கு தாபனத்தின் அதிஉயர் அங்கமான கட்டுப்பாட்டுக் குழுவும், அதனால் நியமிக்கப்பட்ட மத்தியசபை யும் கட்டுப் பொறுப்பு ஏற்கவேண்டும்.

2. கடந்தகால தவறுகள் மீதான குற்றத்தை எந்தவொரு தனிநபர் மீதும் சுமத்திவிடும் உரிமை கட்டுப்பாட்டுக்குழுவுக்கோ, மத்திய குழுவுக்கோ அன்றி வேறு எவருக்குமோ கிடையாது. பின்தள பொதுச்சபையினால் அமைக்கப்படும் விசாரணைக்குழுவே இதனைத் தீர்மானிக்கும்.

3. அ. கட்டுப்பாட்டுக்குழுவால் நியமிக்கப்பட்ட கழக மத்தியகுழு- கட்டுப்பாட்டுக்குழுவை நீக்குவதற்கான அதிகாரமற்றது.

ஆ. இந்தவகையில் ஈஸ்வரன், ராஜன் முதலான மத்தியசபை உறுப்பினர்கள் சிலர் கூடி கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர்களான முகுந்தன், வாசுதேவன், கண்ணன் ஆகியோரை தாபனத்தில் இருந்து நீக்கியதாக அறவித்தது செல்லுபடியற்றதாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ. 24-7-86 அன்று ஜனநாயகபூர்வமான முறையில் தாபனத்தின் பின்தள மகாநாடு கூட்டப்பட்டுவிட்டதால் கழக மத்தியசபையானது இயல்பாகவே கலைந்து போகின்றது.

இந்த வகையில் எந்தவொரு முன்னாள் மத்தியசபை உறுப்பினரும் குழுவாகப் பிரிந்து சென்று தாபனத்தின் பெயருக்கோ, இலட்சனைக்கோ சொத்துக்களுக்கோ உரிமைகோர முடியாது.

4. தளத்தில் கூட்டப்பெற்ற தள மகாநாட்டை அடியொற்றியே பின்தள மகாநாடு கூட்டப்பெற்றது. தளமகாநாட்டை புறக்கணிக்க வேண்டும் அல்லது தள நிருவாகத்தின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பது போன்ற எண்ணங்கள் எதுவும் பின்தள மகாநாட்டிற்கு கிடையாது.

5. தள நிருவாகச் செயலர் ஈஸ்வரன் பின்தளத்தில் தெரிவித்த கருத்துக்களும் நடந்துகொண்ட விதமும், வெளியிட்ட அறிக்கைகளும் தளமகாநாட்டின் நோக்கங்களை திசை திருப்புவிதாகவும், திரித்துக் கூறுபவையாகவும் அமைந்துள்ளது. இதை தளத்தின் முடிவாக அல்லாமல் ஈஸ்வரனின் தனிப்பட்ட முடிவாகவே கருதி பின்தள மகாநாடு கண்டிக்கின்றது.

ஐக்கியம் தொடர்பாக

அ. தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களுடனான ஐக்கியம் நல்முறையில் பேணப்படல் வேண்டும். இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்க வேண்டும். அதற்கான ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும் என இம்மகாநாடு தீர்மானித்துள்ளது.

இறுதியாக இம்மகாநாட்டு முடிவாக அனைத்து பேராளர்களிலும் பொதுச்சபை ஒன்று அமைக்கப்பட்டு இப்பொதுச்சபையானது பின்தளத்திற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் அதி உயர் அங்கமாக விளங்கும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. 1-8-86 அன்று பகல் பன்னிரண்டு மணியளவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மகாநாடு முடிவடைந்தது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எமது ஆயுதங்கள் என்றும் எம்மவருக்கு எதிரானது அல்ல எதிரிக்கு எதிரானதே"

"அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்"

-நன்றி-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

Book Post

To

தோழர் . ஜான்

அரசினர் . பயணியர் விடுதி

பல்கியம்

சேலம் - 1

DELIVERY

CORRECT AND COM

17 SEP 1988



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்